கருவூர் பசுபதீஸ்வரர் கோயில்

என வழங்கும்


திரு ஆனிலைக் கோயில் வரலாறு



கருவூர் திரு ஆனிலைக்கோயில்

தேவஸ்தான வெளியீடு

1950



திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்கள்

தமிழ் ஆசிரியர்

கருவூர் பசுபதீஸ்வரர் கோயில்

என வழங்கும்

திரு ஆனிலைக் கோயில் வரலாறு

திருச்சிராப்பள்ளி பிஷப் ஹீபர் ஹைஸ்கூல் முன்னைத் தமிழ் ஆசிரியரும், சென்னை H. R. E. Board ஆதரவில் பல கோயில் வரலாறுகளை எழுதியவரும் ஆகிய

திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்

எழுதப்பெற்று,

கருவூர் தேவஸ்தானங்களின் நிர்வாகத் தலைவர்

திரு. D. குமாரலிங்கம் பிள்ளை அவர்கள

கௌரவ தர்மகர்த்தர்க்கள்

திரு. T. M. கணபதி பிள்ளை அவர்கள்,
திரு. T. N. இராஜகோபால் நாயுடு அவர்கள்,
திரு. K. R. வெங்கட்டராம ஐயர் அவர்கள்

ஆகியோரால் வெளியிடப்பெற்றது.

தேவஸ்தான வெளியீடு

1950

[*விலை 4 அணா.*

முன்னுரை

இறைவனை வழிபடுவதற்குரிய சிறப்பிடங்கள், ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்கள் ஆகும். அவற்றுள் திருச்சி ஜில்லாவில் கருவூரில் உள்ள ஆனிலைக் கோயிலும் ஒன்று. இது தற்போது பசுபதீஸ்வரர் கோயில் என வழங்கப்பெறுகிறது. கோயிலுக்கு வருவோர் கோயிலின் பெருமையை அறிந்துகொள்வது நலம்.

சென்னை இந்து மத அறநிலையப் பாதுகாப்புப் போர்டார் (Hindu Religious Endowments Board) அனுப்பிய சுற்றறிக்கையின்படி இவ்வரலாறு கருவூர்ப் புராணத்தைத் தழுவிச் சுருக்கமாய் எழுதப்பெற்றுப் போர்டாரால் அங்கீகரிக்கப்பெற்றுள்ளது. இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுச் செய்திகளும், துதிப் பாடல்களும் சேர்க்கப்பெற்றுள்ளன. அன்பர்கள் படித்து ஆனிலை அண்ணலின் திருவருளைப் பெறுக.

திருச்சி,
10—6—50.

R. பஞ்சநதம் பிள்ளை,
தமிழ் ஆசிரியர்.

உள்ளுறை

பக்கம்

கருவூர் பசுபதீஸ்வரர் கோயில்

என வழங்கும்

திரு ஆனிலைக்கோயில் வரலாறு

---

1. கோயிலும் இருப்பிடமும்

ஆதி அந்தம் கடந்த பரம்பொருளும், பசுபதியும் ஆகிய இறைவன், உலகத்தில் உள்ள உயிர்கள் துன்பம் நீங்கி இன்பம்பெற்றுய்யும்வண்ணம் தன் அருவ நிலையை மாற்றி இம்மண்ணுலகத்தில் ஆங்காங்குள்ள பல இடங்களில் உருவத் திருமேனிகொண்டு எழுந்தருளியிருந்து அடியார் களுக்கு அருள் செய்து வருகின்றான். இத்தகைய இடங் களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுவதும் பால் மறைந்திருந்தபோதிலும் மடியின் மூலமாகவே பால் வெளிப் படுவது போல, இறைவன் எங்கும் வியாபித்திருந்த போதிலும் ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் அன்பர்களுக்கு அருள்புரிவான். மக்கட் பிறப்பைப்பெற்ற மாந்தர் அனை வரும் பசுபதியாகிய பரமனை அன்பினால் வழிபட்டு அவன் அருளைப்பெற முயலுதல் தலையாய கடமையாம்.

தென்னாடாகிய தமிழ் நாட்டில் பெருமான் உறையும் கோயில்கள் பல. அவற்றுள் சைவசமயத் தலைவர்களால் தேவாரம் பாடப்பெற்ற திருக்கோயில்கள் 274 உள்ளன. அவைகளுள் திருச்சிராப்பள்ளி ஜில்லா கரூர் தாலுகாவில் கருவூர் ஆனிலை என்னும் திருத்தலம் உள்ளது. கொங்கு

நாட்டைச்சேர்ந்த ஏழுதலங்களுள் இது ஒன்று. திருச்சி-ஈரோடு இருப்புப் பாதையில் கரூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து மேற்கே ஒரு மைல் தூரத்தில் உள்ளது. இது தற்போது பசுபதீஸ்வரர் கோயில் என வழங்கப்படுகிறது. இவ்வூரில் இரண்டு முசாபுரி பங்களாக்களும், ஓர் முனிசிபல் ஹைஸ்கூலும் உள்ளன.

2. தலத்தின் வேறு பெயர்கள்

ஆனிலை என்னும் கோயிலைக்கொண்ட கருவூருக்கு வேறு பெயர்களும் உள்ளன. அவை வஞ்சி, ஆதிமாபுரம், ஆதிபுரி, வஞ்சுளாரணியம், வஞ்சிவனம், கர்ப்பபுரி, கரபுரி, பசுபதீச்சரம், பாற்கரபுரம், சண்மங்கலபுரம், முதலியன.

காமதேனு பூஜை செய்து சிருட்டித் தொழில் செய்ய வரம்பெற்று அகிலமும் அளித்த காரணத்தால் ஊருக்குக் கருவூர் என்றும், பெருமானுக்குப் பசுபதி என்றும், கோயிலுக்கு ஆனிலை (The stable of the sacred cow) என்றும், பசுபதீச்சரம் என்றும் பெயர்கள் வழங்கலாயின.

" ஆனடுத்துயர் பூசனையாற்றிய கிலமும்
தானளித்தலினுற் கருவூரெனத் தக்கது
வானடுத்தெழும் வஞ்சி பசுபதியாயினுர்
பானஞ்சினர் பாழியும் ஆனிலையாயிற்றன்றே"

(பேரூர்ப் புராணம்)


மேலும், வஞ்சி மரத்தைக் கொண்டதால், வஞ்சி, வஞ்சிவனம், வஞ்சுளாரணியம் என்றும், எல்லாப் பதிகளும் தோன்றும் முன்னே தோன்றியதால் ஆதிபுரி, ஆதியாபுரம் என்றும், படைப்புத்தொழில் செய்யக் காரணமாயிருந்ததால் கர்ப்பபுரி என்றும், இறைவன் தான் தோற்றுவித்த மூர்த்திதலம் தீர்த்தங்களைத் தன்னுள் காத்தலினுல்—

(மறைத்தலினால்) கரபுரி என்றும், திருமால் பள்ளிகொண்டிருத்தலினால் பாற்கரபுரம் என்றும், மலை, ஆரணியம், நதி, தீர்த்தம், நகரம், கோயில் என்னும் ஆறு மங்கலப் பொருள்களையும் பெற்றிருப்பதால் சண்மங்கலபுரம் என்றும் பெயர்கள் ஏற்பட்டன.


3. கோயிலின் அமைப்பு

கோயில் ஊருக்கு மேற்கில் அமைந்துள்ளது. சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியும், இரண்டு அம்மன் சந்நிதிகளில் ஒன்று கிழக்கு நோக்கியும், ஒன்று தெற்கு நோக்கியும் அமைந்துள்ளன. கோயிலின் உள்ளிருந்து வெளிவரையில் மூன்று பிரகாரங்கள் உள்ளன. முன்னே பெரிய கோபுர வாயிலும், அதை அடுத்துச் சிறிய வாயிலும் உள்ளன. முதல் பிரகாரத்துச் சுற்று மண்டபங்களில் விநாயகர், சுப்பிரமணியர், முதலிய மூர்த்திகள் இருக்கின்றனர். இதன் வடபக்கத்தில் அம்மன் கோவிலுக்குச் செல்லும் வாயில் உள்ளது. 2-ம் பிரகாரத்தில் முன்னே ஓர் மண்டபமும், தென்பாகத்தில் கருவூர்த் தேவர் கோயிலும் வடபாகத்தில் நூற்றுக்கால் மண்டபமும் உள்ளன. நூற்றுக்கால் மண்டபத்தில் சமயச் சொற்பொழிவுகள் நிகழும். ஊருக்கு நடுவில் தேர் நிலை உள்ளது. திருவிழாக் காலங்களில் சுவாமி புறப்பட்டு ஊருக்குள் வந்து காட்சி தரும். கோயிலின் சுற்றளவு கிழமேலில் சுமார் 465 அடி. தென் வடலில் சுமார் 250 அடி. தலவிருட்சம் வஞ்சி. கோயிலின் அமைப்பைக் காட்டும் படம் ஒன்று தனியே சேர்க்கப் பெற்றுள்ளது.

4. கோயிலின் படம்



எண்களின் விளக்கங்கள் :—



1. மூலஸ்தானம்
2. அம்மன் கோயில் வாயில்
3, 4. அம்மன் சந்நிதிகள்
5. கருவூர்த் தேவர் கோயில்
6. முதல் பிரகாரம்
7. உள் வாயில்
8. முன் மண்டபம்
9. நூற்றுக்கால் மண்டபம்
10. கோபுர வாயில்

5. மூர்த்திகளின் பெயர்கள்

இத் தலத்தில் வீற்றிருக்கும் பெருமான் பசுபதீச்சுரர் எனப்படுவர். காமதேனுவாகிய பசுவால் பூசிக்கப்பெற்ற தாலும், உயிர்களாகிய பசுக்களுக்கெல்லாம் பதியாய் இருப்பதாலும் இப்பெயர் ஏற்பட்டது. அம்மனுக்கு அலங்கார வல்லி, சௌந்தர வல்லி என்ற பெயர்கள் வழங்கும். அலங்காரவல்லி சந்நிதி கிழக்கு நோக்கியும், சௌந்தர வல்லி சந்நிதி தெற்கு நோக்கியும் உள்ளன. புராணத்தில் வடிவுடையம்மை என்னும் பெயர் சொல்லப்பட்டுள்ளது.

மேலும் இவ்விடத்தில் பஞ்சலிங்கங்கள் ஆகிய ஐந்து லிங்கங்கள் மிகச் சிறந்தனவாகச் சொல்லப்படுகின்றன. அவை 1. ஆதிநாயகராகிய பசுபதி லிங்கம் 2. அதன் கீழ்பால் உள்ள கோடீச்சுர லிங்கம் 3. அதன் கீழ்பால் உள்ள கயிலாயநாதலிங்கம் 4. அதன் தெற்கே உள்ள கரியமாலீசர் என்னும் லிங்கம் 5. அதற்கு அக்கினி திக்கில் ஆம்பிரா நதிக்கரையில் உள்ள வஞ்சுளேச்சுர லிங்கம் என்பன.

6. தீர்த்தங்கள்

1. ஆம்பிராவதி நதி—இது வராக கிரியினின்றும் வருவது. அம்பிகையின் திருவருளே நதியாய் வருதலின் அம்பா நதியென்றும், ஆம்பிரம் என்னும் பெயருடைய மாமரங்களின் நிழலில் வருவதால் ஆம்பிராவதி என்றும் காமதேனு இந்நதியிற் படிந்து பல தலங்களைப் பூசித்ததால் பொருனை என்றும் பெயர்கள் வழங்கும். இது தற்காலத்தில் அமராவதி என வழங்குகின்றது. இது திருமுக்கூடல் என்னும் இடத்தில் காவிரி நதியுடன் கலக்கின்றது.

2. தேனு தீர்த்தம். இது வெண்ணெய் மலைக்குக் கிழக்கில் உள்ளது.

3. முருக தீர்த்தம். இது கருவூருக்குக் கிழக்கில் கோபிதார வனத்தில் உள்ளது.

4. அரச தீர்த்தம். இது ஆம்பிராவதிக் கரையில் அரசவனத்தில் உள்ளது.

5. தாடகை தீர்த்தம். இது ஆதிநாயகரின் ஆலயத்துக்குள் கிழக்குத் திக்கில் உள்ளது.

6. பிரம தீர்த்தம். இது வஞ்சுளேச்சுரர் ஆலயத்துக்குக் கிழக்கில் உள்ளது.

" சிவமார் வஞ்சிவனத்திடைத்திகழாம்பிரமா நதியுடனே
தவமார் தேனு முருகவேள் சதுமாமுகத்தோன் தாடகையாம்
இவராற்கண்ட நால்தீர்த்த மிலகும் அரச தீர்த்தமுடன்
பவநோய்தீர்க்கும் தீர்த்தமருள் பசுபதீசப் பெருமானே "

7. தலப் பெருமைகள்

இத்தலம் சோலைகளுக்கு நடுவே அமைந்துள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றிலும் பெருமை உடையது. அம்பிகையின் அருளே ஆறாக ஓடிவரும் சிறப்பு உடையது. தேவலோகப் பசுவாகிய காமதேனு இத்தலத்துப் பெருமானைப் பூசித்து வரம்பெற்ற பெருமை உடையது. ஆறுவிதமங்கலப் பொருள்களையும் உடையது. எறிபத்த நாயனார், புகழ்ச்சோழ நாயனார், சிவகாமியாண்டார், கருவூர்த் தேவர் முதலியோர் இவ்விடத்தில் வாழ்ந்து பேறு பெற்றுள்ளனர். பஞ்சலிங்கங்களைப் பெற்றுள்ளது. சராசரங்களின் அடிச்சுவடுகள் பெறப்பட்டது. சுற்றிலும் பல தீர்த்தங்களை உடையது. அலங்காரவதியாகிய அம்பிகையால் பூசிக்கப்பெற்றது. கோபிதாரத்துவசன் என்னும் மன்னன் பெருமானை வணங்கிப் பெருநோய் நீங்கப்பெற்றது. விபண்டகன் என்னும் வேடன் முத்திப்பேறுபெற்றது. சோழமன்னர் பலர் வாழ்ந்து வந்து பெருமானை வழிபட்டு வந்துள்ளார்கள். பல கல்வெட்டுச் செய்திகளையுடையது. திருஞானசம்பந்தர், அருணகிரி நாதர் ஆகியோர்களால் தேவாரம், திருப்புகழ்ப் பாடல்கள் பெறப்பெற்றது. வஞ்சி முதலிய பல பெயர்

களைப்பெற்றது. 'வஞ்சி வெளிய குருகெல்லாம்' என்று ஔவையார் புகழ்ந்துள்ளார். பல்வேறு மக்கள் செய்யும் தொழில்களால் சிறப்புற்றது. இவ்வூரின் உட்புறத்தில் பள்ளிகொண்ட பெருமாள் கோயிலும், மாரியம்மன் கோயிலும் உள்ளன.

"கடிசேர்மதிலும் நெடுமாடம் கவினும் தெருவும்
மாடமிசைக்
கொடியார் மிரையும் திருக்கோயில் குலமுமடவார்
கொழுநருடன்
குடிசேர் நலனும் தபோதனர்கள் குழுவும்பல்கி
வளமையிலே
படிமீதுயர்ந்த திருக்கருவூர்ப் பசுபதீசப் பெருமானே"

8. சுற்றுக் கோயில்கள்

இவ்வூரில் சிவன் கோவிலுக்குக் கிழக்கில் அபயப் பிரதான ரங்கநாதஸ்வாமி கோயில் உள்ளது. இதில் பெருமாள் பள்ளிகொண்ட நிலையில் காட்சி கொடுக்கிறார். இதற்கு எதிர்ப்புறத்தில் உள்ள மண்டபத்தில் கரூர் தேவஸ்தானங்களின் காரியாலயம் உள்ளது. ஆம்பிராவதி ஆற்றுக்குத் தெற்கே தாந்தோணி (தான்தோன்றி) வெங்கட்டரமணஸ்வாமி மலைக்கோவில் இருக்கிறது. திருப்பதிக்கு இணையாகச் சொல்லப்படுகிறது. பெருமாள் மேற்கு முகமாகக் காட்சி தருகின்றார். பெருமாளின் வடிவம் மலையோடு சேர்ந்து அமைந்துள்ளது. இவைகளுக்குத் தனித் தனியே வரவு செலவு உண்டு. திருவிழாக்களும் தனித் தனியாக நடைபெறுகின்றன.

9. திருப்பணிகள்

சில ஆண்டுகளுக்குமுன் சிவன்கோயில் முழுதும் திருப் பணி செய்யப்பட்டுப் புதுப்பிக்கப் பெற்றுள்ளது. நாட்டுக் கோட்டை நகரத்தார்களால் விளம்பி-ஆவணி-மீ 20-உ பாலஸ்தாபனம்செய்து திருப்பணி ஆரம்பித்து பராபவ-ஆ

ஆனி-மீ 29-ம் தேதியில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடை பெற்றது. பிறகு 1941-ம் ஆண்டில் மின்சார விளக்குகள் அமைக்கப்பெற்றன. 1945-ம் ஆண்டில் 2-ம் பிரகாரத்தில் தென்கிழக்கில் ஓர் தண்ணீர்க்குழாய் வைக்கப்பெற் றுள்ளது.

இக்கோயிலின் கட்டிட அமைப்பு பெரும்பாலும் திருப்பராய்த்துறை, உறையூர்க் கோயில்களைப் போன்று காணப்படுகின்றது. புதிய திருப்பணியில் அழகிய சிற்பங் களும், பல வேறு வடிவங்களும், புதிய மண்டபங்களும் ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது கோயிலில் சில திருப்பணிகள் செய்யப்பட வேண்டியிருக்கிறது. சிவநேயச்செல்வர்கள் இத்திருப்பணி களில் ஆவனசெய்து பெருமான் திருவருளைப் பெறுவார் களாக.

10. வழிபட்டோர்

இத்தலத்துப் பெருமானை ஆதியில் காமதேனு வழி பட்டுப் பேறுபெற்றது. அம்பிகை தனியே வழிபட்டுள் ளார். பிரமன், இந்திரன் முதலிய எட்டுத்திக்குப் பாலகர் கள், சூரியன் சந்திரன் முதலிய நவகோள்கள் ஆகி யோரும் பெருமானை வழிபட்டுள்ளார்கள். முசுகுந்தன், கோபிதாரத்துவசன் முதலிய மன்னர்கள் வழிபட்டு வரம் பெற்றனர். விபண்டகன் என்னும் வேடன் முத்தி பெற் றான். எறிபத்தர், புகழ்ச்சோழர், சிவகாமி ஆண்டார், கரு வூர்த்தேவர் ஆகியோர் வழிபட்டுப் பேறுபெற்றனர். கரு வூர்த்தேவர் கோயில் 2-ம் பிரகாரத்தில் தெற்குப்பக்கத்தில் உள்ளது. திருஞானசம்பந்தரும், அருணகிரியாரும் பெரு மானை வழிபட்டுப் பாடல்கள் பாடியுள்ளார்கள். அவைகள் பின்னே சேர்க்கப்பெற்றுள்ளன. பிற்காலத்தில் சோழ மன்னர் பலர் பெருமானை வழிபட்டுக் கோயிலுக்கு நிலம், பொருள் முதலியன அளித்துள்ளார்கள். இவை இக்கோயி லைப்பற்றிய கல்வெட்டுக்களால் தெரியவருகின்றன.

11. தினப்பூஜையும் திருவிழாக்களும்

இக்கோயிலில் தினந்தோறும் விடியல், காலை, உச்சி, மாலை, இரவு ஆகிய ஐந்து காலங்களிலும் ஆராதனைகள் நிகழ்ந்து வருகின்றன. அந்தந்தப் பூஜைகளுக்குத் தனித் தனியே கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆண்டு தோறும் பங்குனி மாதத்தில் பிரம்மோற்சவம் நடை பெறும். அப்போது மூர்த்திகள் ஊருக்குள் புறப்பட்டு வந்து காட்சி கொடுக்கும். இந்த நாளில் தேரோட்டம் நடைபெறும். இதையல்லாமல் அந்தந்த மாதத்தின் விசேட நாட்களில் சுவாமி புறப்பாடு நிகழும்.

12. வருமானமும் சொத்துக்களும்

இக்கோயிலுக்கு நிலக்குத்தகை, இனம், கட்டிட வாடகை முதலிய வகைகளில் ஆண்டுதோறும் சுமார் ரூ. 7000 வருமானம் உண்டு. சுமார் 15000 மதிப்புள்ள திருவாபரணங்கள் உள்ளன.

13. நிர்வாகம்

இக்கோயிலும் மற்ற வைணவக்கோயில்களும் சேர்ந்த நிர்வாகம் திருச்சி தேவஸ்தான கமிட்டியாருடைய மேற் பார்வையில் இருந்துவந்தது. பிறகு 1938-ம் ஆண்டில் எண்டோமென்ட் போர்டால் ஸ்கீம் ஏற்படுத்தப்பட்டுத் தற்போது சென்னை, அறநிலையப் பாதுகாப்புப் போர்டின் (Hindu Religious Endowments Board) நேர் நிர்வாகத்தில் சேர்ந்து எக்சிகூடிவ் ஆபீசர் ஒருவர் வேலை பார்த்துவருகிறார். அல்லாமல் போர்டாரால் நியமிக்கப்பட்ட மூன்று தர்மகர்த்தாக்கள் உடனிருந்து கோயில் காரியங்களைக் கண்காணித்து வருகிறார்கள். ஸ்ரீ அபயப்பிரதான ரங்கநாதசுவாமி கோயிலும், ஸ்ரீ தாந் தோணிமலை வெங்கட்டரமணசுவாமி கோயிலும் போர்டின் கண்காணிப்பில் இருந்துவருகின்றன. சென்ற 14-1-47 செவ்வாய்க்கிழமை பொங்கல் நாளில் இக்கோயில் ஹரி ஜனங்களின் வழிபாட்டிற்குத் திறந்துவிடப்பட்டது.

14. கல்வெட்டுக்கள்

இக்கோயிலைப்பற்றிய கல்வெட்டுக்கள் 1890-ம் ஆண்டில் 58 முதல் 66 எண் வரையிலும், 1905-ம் ஆண்டில் 135 முதல் 142 எண் வரையிலும் சர்க்காரால் நகல் எடுக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன. சோழ மன்னர்களான ராஜராஜதேவன், ராஜேந்திரதேவன், கோனேரி மேக்கொண்டான், குலோத்துங்க சோழதேவன், விக்கிரம சோழதேவன், இவர்கள் காலத்திலும், மீனாட்சி நாயக்கன் காலத்திலும் ஏற்பட்ட கல்வெட்டுக்கள் உள்ளன. இவர்கள் காலத்தில் கோயிலுக்கு நிலங்களும், கிராமங்களும், பணமும் கொடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. அவைகளின் விவரம் பின்வருமாறு :—

1. பசுபதீஸ்வரர் கோயில் கர்ப்பக்கிரகத்தின் தென் சுவரில் உள்ளது. சோழன் கோ. ராஜகேசரி வர்மன் என்னும் முதலாம் ராஜேந்திர தேவனின் 4-வது ஆண்டில் (1064—70) வெங்கல நாட்டைச் சேர்ந்த அதி ராஜராஜ மண்டலத்தில் உள்ள பாக்கூர் கிராமம் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டது.

2. ௸ இடத்தில் சோழன் கோபரகேசரி வர்மன் என்னும் உடையார் ஸ்ரீ ராஜேந்திர தேவனின் 9-ம் ஆண்டில் (1050—62) வெங்கல நாட்டைச்சேர்ந்த கணபதி நல்லூர் கிராமம் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டது. இதன் விவரம் தனியே காட்டப்பெற்றுள்ளது.

3. 2-ம் பிரகாரத்தின் வெளிச்சுவரில் வாயிலுக்கு இடப்பக்கத்தில் உள்ளது. மூன்றும் குலோத்துங்க சோழ தேவனின் 25-ம் ஆண்டில் தேவன்பள்ளி கிராமத்தார் 3 கழஞ்சுக்குச் சில நிலங்களைக் கோயிலுக்கு விற்றது.

4. ௸ இடத்தில் வலப்பக்கத்தில் உள்ளது. ஈழம், மதுரை, கருவூரைக்கொண்டவனும் பாண்டியனை வென்றவனுமான ௸ சோழமன்னனின் 23-ம் ஆண்டில் தத்தையூர் நாட்டைச்சேர்ந்த 2 கிராமங்கள் கொடுக்கப்பட்ட விவரம்.

5. ஷை இடப்பக்கத்தில் வீரசோழன்—கோனேரி மேக்கொண்டானின் (கோன்நேர் இன்மைகொண்டான் The unequalled among Kings) 23-ம் ஆண்டில் கோயில் வேலைக்காரர்களுக்காக ஆண்டானூர் என்னும் வீரசோழநல்லூர் கிராமம் கொடுக்கப்பட்டது.

6. ஷை வலப்பக்கத்தில் விக்கிரமசோழ தேவனின் 3-ம் ஆண்டில் (1118-55) ஓர் குறிப்பு.

7. கருவூருக்குக் கிழக்கே 3 மைலில் உள்ள ஓர் கல்லில் உள்ள குறிப்பு. இதன் விவரம் தெரியவில்லை.

8. அம்மன் கோயிலின் தென்சுவரில் உள்ளது. ஸ்ரீ ராஜேந்திர சோழதேவனின் 9-ம் ஆண்டில் வெங்கல நாட்டைச்சேர்ந்த நெல்வேப்பள்ளி கிராமம் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டது.

9. ஷை கோயில் கர்ப்பக்கிரகத்தின் வடசுவரில் கோனேரி மேக்கொண்டானின் 15-வது ஆண்டில் வெங்கல நாட்டில் சில வகுப்பாருக்குச் சில உரிமைகள் வழங்கப்பெற்றது.

10. பசுபதீஸ்வரர் கோயிலின் மொட்டை கோபுரத்துக்கு வலப்பக்கத்தில் 3-ம் குலோத்துங்க சோழதேவனின் 25-ம் ஆண்டில் சில குறிப்புகள். விவரம் தெரியவில்லை.

11. ஷை இடத்தில் கோனேரி மேக்கொண்டானின் 3-ம் ஆண்டில் கோயில் வேலைக்காரர்களுக்குச் சில உரிமைகள் வழங்கப்பெற்றது.

12. ஷை இடத்தில் பார்த்திப ஆண்டில் மீனாட்சி நாயக்கன் காலத்தில் ஏற்பட்ட குறிப்பு.

13. ஷை இடத்தில் திரிபுவனச் சக்கரவர்த்தி ராஜராஜ தேவனின் 24-ம் ஆண்டில் சிலர் கோயிலுக்கு நன்கொடை செய்தது.

14. மொட்டை கோபுரத்துக்கு இடப்பக்கத்தில் விக்கிரம சோழதேவனின் 3-ம் ஆண்டில் ஏற்பட்ட குறிப்பு கருவூர், வெங்கல நாட்டில் வீரசோழமங்கலத்தின் ஓர் பகுதியாகச் சொல்லப்பட்டுள்ளது.

15. ஷை இடத்தில் பார்த்திப ஆண்டில் மணியகார் எரரெட்டி காலத்தில் கோயிலுக்கு தானம் ஏற்பட்டது.

16. ஷை இடத்தில் 3-ம் குலோத்துங்க சோழனின் 36-வது ஆண்டில் நிலம் தானம் செய்யப்பட்டது. இதில் 12 அடி ஓர் குழி என்றும், 500 குழி ஓர் மா என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

17. கோபுர வாயிலுக்கு வலப்பக்கத்திலுள்ள ஓர் தூணில் பிராமணர்களுக்கு உணவு இடுவதற்காகச் சில நாயக்க குலத்தார்கள் ஓர் சத்திரம் ஏற்படுத்தியது.

18. அம்மன் கோயிலின் தெற்குப் பக்கத்திலுள்ள ஓர் தூணில் விக்கிரமசோழனின் 12-வது ஆண்டில் (1118-35) கருவூர் திருவானிஸ்வர உடையாருக்கு ஓர் கிராமம் தானம் செய்யப்பட்டது.

19. பசுபதீஸ்வரர் கோயிலின் மகா மண்டபத்துக்குத் தெற்கில் உள்ள ஓர் தூணில் ராஜேந்திர தேவனின் 9-வது ஆண்டில் சில நிலங்கள் தானம் செய்யப்பட்டது.

20. கட்டக்கோபுர வாயிலின் தெற்கிலுள்ள தூணில் குலோத்துங்க சோழதேவனின் 23-ம் ஆண்டில் ஸ்தலத்தாருக்காக ஓர் கிராமம் தானம் செய்யப்பட்டது.

21. அம்மன் கோயிலுக்கு மேற்கில் உள்ள கல் தூணில் திருவண்ணாமலை மகாதேவருக்கு அழகிய சொக்கக் கூத்தாநல்லூர் கிராமம் தானம் செய்யப்பட்டது.

22. அம்மன் கோயிலின் உட்புறத்தில் உள்ள ஓர் கல் தூணில் குலோத்துங்க சோழனின் 21-ம் ஆண்டில் ஆதிச்சமங்கலம் என்னும் கிராமம் கோயிலுக்கு தானம் செய்யப்பட்டது.

23. பசுபதீஸ்வரர் கோயிலில் கட்டக்கோபுரத்தின் தெற்குப் பக்கத்துள்ள ஓர் கல் தூணில் சோழன் ராஜராஜ தேவனின் 24-ம் ஆண்டில் சில நிலங்கள் வாங்கப்பெற்று கோயிலுக்கு தானம் செய்யப்பெற்றது.

முன் பக்கங்களிற் கண்ட கல்வெட்டுக்களில் 2-வது எண்ணில் கண்ட கல்வெட்டின் விவரம் :—(59 of 1890).

This inscription is found on the south wall of the Pasupatheeswara temple at Karur, Trichinopoly District. It records that Rajendradeva gave the village of Kanavadinallur (கணவதிநல்லூர்) to the God Siva of Thiruvanilai temple for necessary expenses, in the 9th year of his reign. The probable date of the grant is 1020 A. D.

" ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் மருவிய செங்கோல் வேந்தன் தன் முன்னேன்சேனை பின்னதுவாக முன்னெதிர்சென்று இரட்டைபாடி யேழரை யிலக்கமுங்கொண்டு எதிரமர் பெருது எண்டிசை நகம்பறையது கறங்கப் போராற்றங் கரைக் கொப்பத்து | வந்தெதிர்த்த ஆஹவமல்லன்றன் பெருஞ் சேனை யெல்லாம் படப்பொருது பாரது நிகழப் பசும்பிணமாக்கி ஆங்கவனஞ்சிப் புறக்கிட்டோட அவனுனையுங் குதிரையும் பெண்டு பண்டாரமும் ஒட்டகத்தொடு அகப்படப் பிடித்து திசையது நிகழவீரர் அபிஷேகம் பண்ணி வீரசிம்ஹாசனத்து வீற்றிருந்தருளிய கோப்பரகேசரான உடையார் ஸ்ரீ ராஜேந்திர தேவற்கு யாண்டு 9-வது அதிராசராச மண்டலத்து வெங்கால நாட்டுக் கணவதி நல்லூர் கீழ்பாக்கெல்லை எருத்துக் குளத்துக்கு மேற்கும், வடபாக்கெல்லை நாட்டுப்பெருவழிக்கு தெற்கும், தென்பாக்கெல்லை ஆற்றுக்கு வடக்கும், மேல் பாக்கெல்லை இராஜமஹேந்திரன் பதிக்குக் கிழக்கும் இன் னுன்கெல்லைக்குட்பட்ட நில நஞ்சை புஞ்சை திருவாநிலை மஹாதேவற்கு வேண்டும் நிமந்தங்களுக்குத் திருவுமத்துக்காணியாக உடும்போடி ஆமை தவழ்புற்று எழுந்த இடம் கற்றுப்புல் பொரகறமுற்றாட்டும் இறுப்பதாக நம் ஓலைகுடுக்க திருவாய் மொழிந்தருளினாரென்று திருமந்திரவோலை க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு பனையூர் நாட்டுநேர்வாயிலுடையான் தாழி திருப்பனங்காடு உடை

யானுன வானவன் பல்லவதரையன் எழுத்து. திருமந்திர ஓலைநாயகம் இராஜராஜனான தொண்டைமான் எழுத்து. ஊரான் உத்தமசோழனான இராஜராஜ பிரஹ்மாதிராயன் எழுத்து. அரையன் இராசராசனான வீரராஜேந்திர ஜெயமுரி நாடாழ்வான் எழுத்து. உடன் கூட்டத்து அதிகாரிகளில் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப்பனையூர் நாட்டு ஜெயங்கொண்டசோழநல்லூருடையார் உதைய திவாகரன் கூத்தாடியரான வீரராஜேந்திர மழவராயன் எழுத்து. இவை பந்மாஹேச்வர ரக்ஷை."

இக் கல்வெட்டுக்களின் சில விவரங்கள், கோயிலின் புதுத் திருப்பணியால் மாறியிருக்கலாம் எனத் தெரிகிறது. இவைகளிலிருந்து இத்தலம் மிகப் பழமையானதென்றும் சோழமன்னர் காலத்தில் சீரும் சிறப்பும் பெற்றிருந்த தென்றும், கோயிலுக்கு மிகுந்த வருமானமும் சொத்துக்களும் இருந்தன என்றும், இவ்வூர் திருவானிலை, திருவானீஸ்வரம் என்று வழங்கிவந்ததென்றும், பெருமானுக்குத் திருவானிலை மகாதேவர், திருவானீஸ்வரமுடையார் என்னும் பெயர்கள் வழங்கிவந்தனவென்றும் தெரியவருகின்றன.

15. சரித்திர வரலாறு

கொங்கு நாட்டு ராஜதானியாக இவ்வூர் விளங்கியது. சோழமன்னர் காலத்தில் இத்தலம் திருவானிலை, முடிவழங்கு சோழபுரம் என்றும், இவ்வூர்ப்பகுதி வெங்கல நாடு, அதிராசராசமண்டலம், கேரளாந்தகவளநாடு என்றும் வழங்கப்பெற்றுவந்ததென்றும், கல்வெட்டுக்களால் அறிகிறோம். சேரமன்னர்களுக்குப் பழய தலை நகரமாக வஞ்சி என்று பெயர்பெற்றுள்ளது. பல ஆண்டுகளுக்கு முன் இவ்வூர் வெளிநாட்டு வர்த்தகத்தில் மிகவும் சிறந்திருந்ததென்றும் அதற்கு அடையாளமாக ரோமதேசத்து நாணயங்கள் இவ்வூரில் கண்டெடுக்கப்பட்டன என்றும் சொல்லப்படுகிறது. ராஜேந்திர சோழன் என்பவன் பேராற்றங்கரையிலுள்ள கொப்பம் என்னும் ஊரில் நிகழ்ந்த போரில் சாளுக்கிய மன்னனான ஆஹவமல்லனின்

சேனைகளைச் சிதற அடித்து அவனை அஞ்சியோடச்செய்து வென்ற செய்தியும் புலனாகிறது. ஆகவமல்லன் என்பவன் சோமேஸ்வரன் I என்றும் சொல்லப்படுகிறான். குலோத்துங்கசோழன் என்பவன் பாண்டியனை வென்றதும், இலங்கை, மதுரை, கருவூர் ஆகிய இடங்களைத் தன் வசப்படுத்திக்கொண்ட வரலாறும் மற்றும் பல செய்திகளும் தெரியவருகின்றன. உள்ளி விழா என்ற ஓர் திருவிழாவும் இவ்வூரில் நிகழ்ந்து வந்ததாகத் தெரிகிறது.

16. புராண வரலாறுகள்

இத்தலத்தைப்பற்றிய ஓர் புராணம் செய்யுளில் உள்ளது. பாயிரம் முதல் கருவூர்த் தேவர் கதிபெறு சருக்கம் வரையில் 21 சருக்கங்கள் உள்ளன. இதைத் தழுவியும், பெரிய புராணத்தைத் தழுவியும் சில வரலாறுகள் எழுதப்பட்டுள்ளன.

(1) எறிபத்தர் வரலாறு

கொங்கு நாட்டின் தலை நகரமாகிய கருவூரில் எறிபத்தர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் ஆனிலைப் பெருமானை வழிபட்டும் சிவனடியார்களுக்குத் துன்பம் வராமல் பாதுகாத்தும், அவர்களுக்குத் துன்பம் செய்தவர்களைத் தன் கையிலுள்ள மழுப்படையால் தண்டித்தும் தொண்டு செய்து வந்தார்.

அவர் காலத்தில் சிவகாமியாண்டார் என்பவர் தினந்தோறும் நந்தவனத்திற்குச் சென்று மலர் கொய்து மாலை கட்டி ஆனிலைப் பெருமானுக்குச் சாத்திவந்தார். ஒருநாள் அவர் மலர் பறித்துக் கூடையில் நிரப்பி அக் கூடையைக் கோலில் தொங்கவிட்டு வீதியில் வந்தார். அப்போது புகழ்ச்சோழ மன்னனது பட்டவர்த்தனம் என்னும் யானை அவ்வழியே வந்தது. சிவகாமியாண்டாருடைய பூக்கூடையைப் பறித்துக் கீழே சிதறிவிட்டுச் சென்றது. யானைப் பாகரும் யானையை வேகமாக நடத்திச் சென்றனர். சிவ-

காமியாண்டார் ஒன்றும் செய்ய இயலாதவராய்ப் பெருமானை நினைத்துச் "சிவதா—சிவதா" என்று முறையிட்டார். எறிபத்தர் இதைக் கேள்வியுற்று ஓடிவந்து அடியார்க்கு நேரிட்ட துன்பங்களைக் கேட்டார். அதிவேகமாக ஓடி யானையின் துதிக்கையை மழுவினால் வெட்டினார். யானை அலறிக்கொண்டு கீழே விழுந்து மாய்ந்தது. பாகர்களையும் மழுவால் தாக்கிக் கொன்றார்.

இச் செய்திகளைப் புகழ்ச்சோழர் கேள்வியுற்றார். மிகுந்த கோபங்கொண்டார். உடனே குதிரையில் ஏறிச் சேனைகளுடன் புறப்பட்டு யானை இறந்த இடத்திற்கு வந்தார். அங்கு மழுவுடன் நின்றுகொண்டிருந்த எறிபத்தரைக் கண்டார். யானை செய்த தீங்கையும் பாகர் அதைத் தடுக்காமல் இருந்த பிழையையும் தெரிவித்துத் தாம் அவர்களைக் கொன்ற காரணத்தையும் எறிபத்தர் விளக்கினார். புகழ்ச்சோழர் இதைக் கேட்டு அடியார்க்குத் தீங்கு செய்த யானையையும் பாகரையும் கொன்றது போதாது. என்னையும் கொல்லவேண்டும் என்று சொல்லித் தம் உடைவாளை எடுத்து எறிபத்தரிடம் கொடுத்தார். அவர் அதை வாங்குவதற்குச் சிறிது தயங்கி, வாங்காவிடில் தாமே மாய்த்துக்கொள்வார் என்று அஞ்சி வாளை வாங்கினார். பிறகு எறிபத்தர் புகழ்ச்சோழருடைய அடியார் பக்தியை வியந்து அந்த வாளால் தாமே மாய்த்துக் கொள்ள முயன்றார். அப்போது புகழ்ச் சோழர் அவரைத் தடுத்து நின்றார்.

அப்பொழுது இருவரும் கேட்கும்படி "உங்கள் மெய்யன்பை உலகம் அறிந்துகொள்ளும்படி இந்த நிகழ்ச்சி ஏற்பட்டது" என்று ஓர் அசரீரி வாக்கு வானில் எழுந்தது. அதைக் கேட்டு இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கினர். பெருமான் அருளால், இறந்த யானையும் பாகரும் உயிர்பெற் றெழுந்தார்கள். புகழ்ச் சோழர் யானைமீது ஏறித் தம் மாளிகையை அடைந்தார். எறிபத்தர் சிலகாலம் சிவத் தொண்டு செய்து சிவபதம் பெற்றார். அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராக இவர் விளங்குகின்றார்.

"அத்தர்க்காகு மலர்சிதைத்த யானைபாகரோடமையாது
ஒத்திங்கெனையு மடுகவென உடைவாள்வளவன்
கொடுப்பநெகிழ்
சித்தராகி யவ்வாளைத்தமது களத்திற்செறிந்தளறி
பத்தர்க்கிரங்கிஅருள் கருவூர்ப்பசுபதீசப்
பெருமானே"

(2) புகழ்ச்சோழர் வரலாறு

சோழ நாட்டில் உறையூரில் புகழ்ச்சோழர் என்னும் மன்னர் நெறி தவறாது அரசாண்டு வந்தார். சிவத்தலங்கள் எல்லாவற்றிலும் பூஜைகள் முதலியன செவ்வையாய் நடத்துவித்தும், சிவனடியார்களிடத்தில் மிகுந்த அன்பு கொண்டும், அவர்கள் வேண்டுவன உதவியும் வந்தார்.

இங்ஙனம் நிகழும் நாளில் கொங்குநாட்டரசர்களிடமிருந்து திறை (வரி) வாங்கும்பொருட்டு அரசுரிமைக் கூட்டத்தாருடன் கருவூர் வந்து சேர்ந்தார். அங்கு அரசர் பலர் தம் தம் திறைப் பொருள்களைக் கொண்டுவந்து செலுத்தினர். அங்கிருக்கும் காலத்தில் எறிபத்த நாயனாருடைய நட்பையும் பெற்றார். பின்பு மந்திரிகளிடம் திறைசெலுத்தாத மன்னர்களைப்பற்றி வினவினர். மந்திரிகள் 'மலைநாட்டரசனான அதிகன் என்பவன் திறை செலுத்தவில்லை' என்றனர். அரசர் 'சேனைகளுடன் சென்று அவனுடன் போர்செய்து வென்றுவருக' என்று கட்டளையிட்டார். மந்திரிகள் அவ்வாறே புறப்பட்டுச் சென்று அதிகனுடைய அரணை முற்றுகையிட்டார்கள். அதிகனும் புறங்காட்டி ஓடி ஒளித்தான். பிறகு மந்திரிகள் அதிகனுடைய பல பொருள்களையும் கைப்பற்றினர். அவனுடைய சேனைகளையும் கொன்று அவர்களுடைய தலைகளையும், நிதிக்குவைகளையும் கருவூருக்குக் கொண்டுவந்து அரசர்க்குமுன்னே வைத்தார்கள்.

புகழ்ச்சோழர் அந்தத் தலைகளின் நடுவில் ஓர் தலையில் ஓர் சிறிய சடை இருப்பதைக் கண்டார். கண்டவுடன் நடுங்கி 'சிவனடியாரைக் கொல்வித்துப் பழிபூண்டேன், கெட்டேன்' என்று சொல்லிப் புலம்பினர். இப்பழியை

நீக்குதற்கு ஓர் பரிகாரம் செய்யத் துணிந்தார். தமது புதல்வனுக்கு முடிசூட்டி அவனை அரசுபுரியும்படி செய்தார். பிறகு ஆலயத்தில் ஓர் அக்கினிகுண்டம் அமைக்கச்செய்து சடைத்தலைபை ஓர் பொற்கலத்தில் ஏந்தி அக்கினியை வலம் வந்து அதனுள் இறங்கிப் பெரும்பதம் பெற்றார். இவரும் சிவனடியார்களுள் ஒருவராக நாயன்மார்களின் குழுவில் விளங்குகின்றார்.

"காய்ந்தசுடர்வேற் புகழ்ச்சோழர் கண்ணார்நுதலோனடியார்கள்
வேய்ந்தசடையாதிகளிடத்து மெய்யன்புடையார் பெரும்போரில்
மாய்ந்ததலையொன்றினிற் சிறுபுன்சடை கண்டயர்த்து வளர்த்தெரியிற்
பாய்ந்துகதிபெற்றிடுங் கருவூர்ப் பசுபதீசப்பெருமானே"

(3) கருவூர்த்தேவர் வரலாறு

இவர் கருவூரில் அந்தணர் குலத்தில் பிறந்தவர். கருவூரில் பிறந்த காரணத்தால் கருவூர்த்தேவர் எனப்பெயர் பெற்றார். சிவபக்தியிலும் யோகப்பயிற்சியிலும் சிறந்தவர். காயசித்தி அடைந்தவர். மெய்ஞ்ஞானம் கைவரப்பெற்றவர், கருவூரில் இருந்தபோது, மழையில்லாக் காலத்தில் மழை பெய்யவும், ஆறு பெருகிவரவும் இவைபோன்ற பல அற்புதங்களைச் செய்துவந்தார். பல சிவத்தலங்களையும் வைணவத் தலங்களையும் தரிசித்து வந்தார். ஒரு சமயம் இவர் திருநெல்வேலிக்குச் சென்று ஆங்கு வீற்றிருக்கும் நெல்லையப்பரை அழைத்ததாகவும், இவரது பெருமையை யாவரும் அறியும்வண்ணம் பெருமான் காட்சிதாத் தாமதித்ததாகவும் அதற்காக ஊரைப் பாழாக்கியதாகவும், பிறகு ஊரார் வேண்டுகோளுக்கிணங்கி ஊரைச் செழித்தோங்கச் செய்ததாகவும் கூறுவர்.

அந்நாளில் தஞ்சையில் ராஜராஜசோழன் புதிதாகக் கட்டுவித்த பெரிய கோயிலில் சிவலிங்கப்பிரதிட்டை செய்த

போது ஆவுடையாருடன் பொருந்தாமல் இருந்தது. அரசன் இப்பெரியாரிடம் தம் குறையைத் தெரிவிக்க இவர் ஆங்குச்சென்று பெருமானை வழிபட்டுச் சிவலிங்கப் பிரதிட்டை செய்தார். அனைவரும் கண்டு அதிசயித்து மகிழ்ந்தார்கள். இவ்வாறே வேறு பல தலங்களுக்கும் சென்று பல அற்புதங்களைச் செய்ததாகக் கூறுவர். இறுதியாக இவர் கருவூரில் ஆனிலைப்பெருமானை வழிபட்டுக்கொண்டிருந்து சிவபதம் பெற்றார். கருவூர் சிவன்கோயிலில் தெற்குப்பிரகாரத்திலும், தஞ்சைப் பெரிய கோயிலில் (இராசராசேச்சரம்) மேற்குப் பிரகாரத்திலும் இவருடைய கோயில்கள் உள்ளன.

இவர், கோயில்—(சிதம்பரம்), திருக்களந்தை, கீழ்க்கோட்டூர், திருமுகத்தலை, திரைலோக்கியசுந்தரம், கங்கைகொண்ட சோளேச்சரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராசராசேச்சரம், திருவிடைமருதூர், முதலிய தலங்களுக்குச்சென்று திருவிசைப்பா பதிகங்கள் பாடியுள்ளார். திருவிசைப்பா ஆசிரியர்களுள் இவருடைய பாடல்களே மிகுதியாய் உள்ளன. இவை சைவத்திருமுறைகளுள் 9-ந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன.

'வாரமார் கருவூர்த்தேவரெனு மௌனசிவயோகியர் வேதச்
சிரமாரிசைப்பாபலமொழிந்துசிவத்தானங்கள்பலவணங்கிக்
கரமார்நெல்லியெனச் சித்திகாட்டிவதிய அவர்க்குமுத்திப்
பரமானந்தந்தருங் கருவூர்ப்பசுபதீசப் பெருமானே'

17. இலக்கியங்கள்—பாடல்கள்

(1) திருஞானசம்பந்தர் பாடிய தேவாரம்

இவர் கொங்கு நாட்டில் உள்ள தலங்களுக்குச் சென்று வழிபட்டுக் கருவூருக்குவந்து திருவானிலைக் கோயில் பெருமானை வணங்கிப் பதிகம் பாடினார். இதைச் சேக்கிழார்

“ செல்வக்கருவூர்த்திருவானிலைக் கோயில் சென்றிறைஞ்சி
நல்லிசைவண்டமிழ்ச் சொற்றொடைபாடி ”

என்று கூறியுள்ளனர். அப்போது பாடிய பதிகம்:—

1 தொண்டெ லாம்மலர் தூவி யேத்தநஞ்
சுண்ட லாருயி ராயதன்மையர்
கண்டனார்கரு வூருள் ஆனிலை
அண்டனா ரருளீயும் அன்பரே.

2 நீதியார் நினைந்தாய நான்மறை
ஓதியாரொடுங் கூடிலார் குழைக்
காதினார்கரு வூருள் ஆனிலை
ஆதியாரடி யார்தம் அன்பரே.

3 விண்ணுலாமதி சூடி வேதமே
பண்ணுளார்பர மாய பண்பினர்
கண்ணுளார்கரு வூருள் ஆனிலை
அண்ணலாரடி யார்க்கு நல்லரே.

4 முடியர் மும்மத யானையீருரி
பொடியர் பூங்கணைவேளைச் செற்றவர்
கடியுளார்கரு வூருள் ஆனிலை
அடிகள் யாவையும் ஆய ஈசரே.

5 பங்கயம்மலர்ப் பாதர் பாதியோர்
மங்கையர்மணி நீல கண்டர்வான்
கங்கையர்கரு வூருள் ஆனிலை
அங்கையாடர வத்தெம் அண்ணலே.

6 தேவர்திங்களும் பாம்பும் சென்னியில்
மேவர்மும்மதில் எய்த வில்லியர்
காவலர்கரு வூருள் ஆனிலை
மூவராகிய மொய்ம்பர் அல்லரே.

7 பண்ணினார் படி யேற்றர் நீற்றர்மெய்ப்
பெண்ணினார் பிறை தாங்கு நெற்றியர்
கண்ணினார் கரு வூருள் ஆனிலை
நண்ணி னார்நமை ஆளும் நாதரே.

8 கடுத்த வாளரக்கன்க யிலையை
எடுத்த வன்தலை தோளுந் தாளினால்
அடர்த்த வன்கரு வூருள் ஆனிலை
கொடுத்த வன்னருள் கூத்தன் அல்லனே.

9 உழுது மாநிலத் தேன மாகிமால்
தொழுது மாமல ரோனும் காண்கிலார்
கழுதி னன்கரு வூருள் ஆனிலை
முழுது மாகிய மூர்த்தி பாதமே.

10 புத்தர் புன்சமண் ஆதர் பொய்யுரைப்
பித்தர் பேசிய பேச்சை விட்டுமெய்ப்
பத்தர் சேர்கரு வூருள் ஆனிலை
அத்தர் பாதம் அடைந்து வாழ்மினே.

11 கந்த மார்பொழில் காழி ஞானசம்
பந்தன் சேர்கரு வூருள் ஆனிலை
எந்தை யைச்சொன்ன பத்தும் வல்லவர்
சிந்தை யில்துய ராய தீர்வரே.

(2) கருவூர்த் தேவர் அருளிய திருவிசைப்பா. 10 பதிகங்கள்

1 இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும் ஏழையேற்
கென்னுடன்பிறந்த
ஐவரும்பகையே யார்துணையென்றால் அஞ்சலென்
றருள்செய்வான்கோயில்
கைவரும்பழனங்குழைத்த செஞ்சாலிக் கடைசியர்
களைதருநீலம்
செய்வரம்பரும்பும் பெரும்பற்றப்புலியூர்த் திருவளர்
திருச்சிற்றம்பலமே.

2 பழையராந் தொண்டர்க் கெளியரே மிண்டர்க்கரியரே
பாவியேன்செய்யும்
பிழையெலாம் பொறுத்தென் பிணிபொறுத்தருளாப்
பிச்சரே நச்சராவிளரும்

குழையராய் வந்தென்குடிமுழுதாளுங் குழகரே
ஒழுகுநீர்க்கங்கை
அழகரேயாகில் அவரிடம் களந்தை அணிதிகழ்
ஆதித்தேச்சரமே.

3 திருநுதல்விழியும் பவளவாய் இதழும்திலகமும்
உடையவன்சடைமேல்
புரிதருமலரின்தாது நின்றாதப்போய் வருந்தும்பி
காளிங்கே
கிரிதவழ்முகிலின் கீழ்த்தவழ்மாடம் கெழுவுகம்பலை
செய் கீழ்க்கோட்டூர்
வருந்திறல் மணியம்பலவனைக்கண் டென்மனத்தையும்
கொண்டுபோதுமினே.

4 புவனநாயகனே அகவுயிர்க்கமுதே பூரணா ஆரணம்
பொழியும்
பவளவாய்மணியே பணிசெய் வார்க்கிரங்கும் பசுபதீ
பன்னகாபரணா
அவனிஞாயிறுபோன் றருள்புரிந்தடியேன்
அகத்திலும் முகத்தலை மூதூர்த்
தவளமாமணிப்பூங்கோயிலும் அமர்ந்தாய் தனிய
னேன் தனிமைநீங்குதற்கே.

5 நையாதமனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத்தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கியசுந்தரனே.

6 தத்தையங்கனையார் தங்கள்மேல்வைத்த தயாவை
நூறாயிரங்கூறிட்
டத்திலங் கொருகூறுன் கண்வைத்தவருக் கமருல
களிக்கும்நின்பெருமை
பித்தனென்றொருகாற் பேசுவரேனும் பிழைத்தவை
பொறுத்தருள்செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிமேல் வைத்த
சங்கைகோண்ட சோளேச்சரத்தானே.

7 பாம்பணைத்துயின்றோன் அயன்முதல்தேவர்
பன்னெடுங் காலம்நிற் காண்பான்
ஏம்பலித்திருக்க என்னுளம்புகுந்த எளிமையை
என்றும் நான் மறக்கேன்
தேம்புனற் பொய்கை வாளைபாய் மடுப்பத்
தெளிதரு தேறல்பாய்ந் தொழுகும்
பூம்பணைச்சோலை ஆவண வீதிப்
பூவணம் கோயில் கொண்டாயே.

8 செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள் வீற்றிருந்த
அங்கணா போற்றி அமரனே போற்றி
அமரர்கள் தலைவனே போற்றி
தங்கள்நான் மறைநூல் சகலமுங்கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கள்நாயகனே போற்றியே ழிருக்கை
இறைவனே போற்றியே போற்றி.

9 பன்னெடுங்காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க
என்னெடுங் கோயில் நெஞ்சுவீற் றிருந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
மின்னெடும் புருவத் திளமயி லனையார்
விலங்கல்செய் நாடக சாலை
இன்னடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராச ராசேச்சரத் திவர்க்கே.

10 இந்திர லோகம் முழுவதும் பணிகேட்
டிணையடி தொழுதெழத் தாம்போய்
ஐந்தலை நாகம் மேகலை அரையா
அகந்தொறும் பலிதிரி அடிகள்
தந்திரி வீணை கீதமும் பாடச்
சாதி கின்னரங்கலந் தொலிப்ப
மந்திரகீதம் தீங்குழல் எங்கும்
மருவிடம் திருவிடைமருதே.

(3) அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்

இத்தலத்திற்கு 5 பாடல்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று :—

சஞ்சல சரிதபர நாட்டர்கள்
மந்திரி குமரர்படை யாட்சிகள்
சங்கட மகிபர் தொழ ஆக்கினை முடிசூடித்
தண்டிகை களிறுபரி மேற்றனி
வெண்குடை நிழலி னுலவ வாக்கனை
சம்ப்ரம விபவசவு பாக்கிய முடையோராய்க்
குஞ்சமும் விசிறவிரு மாப்பொடு
பஞ்சணை மிசையிலிசை யாத்திரள்
கொம்புகள் குழல்கள்வெகு வாத்தியம் இயல்கீதம்
கொங்கணி மகளிர்பெரு நாட்டிய
நன்றென மனது மகிழ் பாத்திபர்
கொண்டய னெழுதும்யம கோட்டியை உணராரே
பஞ்சவர் கொடியவினை நூற்றுவர்
வென்றிட சகுனிகவ றுற்பொருள்
பங்குடை யவனிபதி தோற்றிட அயலேபோய்ப்
பண்டையில் விதியையினை யாப்பனி
ரண்டுடை வருஷமுறை யாப்பல
பண்புடன் மறைவின்முறை யாற்றிரு வருளாலே
வஞ்சனை நழுவிநிரை மீட்சியில்
முந்துத முடையமனை வாழ்க்கையின்
வந்தபின் உரிமையது கேட்டிட இசையாநாள்
மண்கொள விசையன்விடு தேர்ப்பரி
உந்தினன் மருகவய லூர்க்குக
வஞ்சியிலமரர் சிறை மீட்டருள் பெருமாளே.

(4) கருவூர்ப்புராணம்

இதில் 21 சருக்கங்கள் உள்ளன. இதன் ஆசிரியரின் பெயர் தெரியவில்லை. இந்நூலுக்குக் கோயம்புத்தூர்

வித்வான் கந்தசாமி முதலியார் வசனம் எழுதியுள்ளார். ஒவ்வொரு சருக்கத்திற்கும் ஒவ்வொரு பாடல் பாடியுள்ளார்.

தல விநாயகர்

1 அஞ்சுளாரணி யெழுத்தோராறுளார் சடையிற்கண்ட
நஞ்சுளாரணிய பாகநயந்துளார் ஞானம்பூத்த
நெஞ்சுளாரணி பயந்த நிறைமதக்கவுட்டுநால்வாய்
வஞ்சுளாரணிய மேவும் களிற்றினை வழுத்தல்
செய்வாம்.

முருகக் கடவுள்

2 உரைதரு சுருதிவேத உபநிடதத்தினுச்சிப்
பரையருள் விழிகளிப்பப் பார்விசும் புய்யத்தோன்றி
வரைபக முருக்கி வெஞ்சூர் மாமுதல் தடிந்துமுந்நீர்க்
குரைகடல் குடித்தவை வேல் குமரனுக்கன்பு
செய்வாம்.

நந்திதேவர்

3 அந்திவான் பிறையுமானும் அடல்மழுப்படையு
மேந்தித்
தந்திவீழுரிவை போர்த்த தனிமுதல் உருவந்தாங்கிப்
புந்திமாலகலஞான போதக வெயில்விரிக்கும்
நந்திவாணிரவிநாடி நமதிருள் நலிவுசெய்வாம்.

பசுபதீச்சுரர்

4 மேவருதத் துவசித்தி யடைந்துதத்த மெய்யுணர்ந்து
விமலஞான
மூவகையா ருயிர்விளங்கி முதிருமன்பால் வழங்கு
மொரு முத்திவாழ்வைப்
பாவனைகடந்து நின்ற பரஞ்சுடரைப் பசுபதிநா
யகனை முன்னைத்
தேவர்கள்தே வைக்கருவூர்ச் சிவக்கொழுந்தை
இதயமலர் திகழவைப்பாம்.

வடிவுடையம்மை

5 நதிகாட்டும் புனற்கழனி வளங்காட்ட அறங்காட்டும்
நலஞ்சேர் வஞ்சிப்
பதிகாட்டும் பசுபதியோ டிடங்காட்ட வலங்காட்டும்
பரையை மேலாம்
கதிகாட்டும் கருங்குயிலை அருள்காட்டும் கயலிரண்டு
காட்டும் தூய
மதிகாட்டும் மடமயிலை வடிவுடைய நாயகியை
வணங்கி வாழ்வாம்.

திருஞானசம்பந்தர்

6 பொன்புனை கமலச்செல்வி போற்றுபேரெழிலும்தூய
வன்புநல்லறமும் கற்பும் அவயவமாக ஞானம்
முன்புருவமைந்த பேதை முற்றிய என்புக்காவி
பின்பருள்புரிந்த காழிப் பிள்ளைதாட்கன்புசெய்வாம்.

திருநாவுக்கரசர்

7 சூழிமால்யானைதாழப் பிணித்தகற்றூணந்தாழா
தாழிவாய்மிதப்ப மேலாம் ஐந்தெழுத்துணர்வி
னோங்கிக்
காழிவாழ் ஞானம்பூத்த கவுணியக் கொழுந்தைநட்ட
வாழிவாகீசர் வாசமலர்ப்பதம் வணங்கல்செய்வாம்.

சுந்தரமூர்த்தி

8 வெள்ளியங்கிரியை நீங்கி நாவலூர் மிளிரத்தோன்றி
ஒள்ளியதோகைபாகன் சாதனத்தோட்டிக் குள்ளாய்த்
தெள்ளிய பாவையாழ்ந்த சங்கிலி சிமிழ்ப்புற்றுசு
தள்ளிய களிற்றின்பாத தாமரைதலைமேற்கொள்வாம்.

மாணிக்கவாசகர்

9 துன்றிருள் நீங்குமாறும் சுடரொளி தோன்றுமாறும்
முன்றிரு மறைகாணாத முதலைபூந்தருளிப்பார் மேல்
தன்றிரு ஞானபாதம் அளித்தலுந் தனையுணர்ந்த
தென்றிரு வாதவூரன் சேவடி சென்னிசேர்ப்பாம்.

எறிபத்தர்

10 மறிவைத்த கரனுக்கன்பர் கொடுவரு மலரைச்சிந்தும்
வெறிவைத்தகளிறும் பாகும் வீடவெங்கணிச்சிவீசிச்
செறிபத்தரிடையூறீர்ந்து சிவநெறிவழாது செய்யும்
எறிபத்தரிணைத்தாளுள்ளத் திருத்தியெம் இடர்கள்
தீர்வாம்.

புகழ்ச்சோழர்

11 அளவிலாநிலைநாதற்குச் சேதிம மாதியாற்றிக்
களமதின் ஓராதீர்ந்த சடைத்தலைகாண்டலும் பொன்
கிளர்முடி மிசைபரித்துக்கேழ்கிளர் எரியின்மூழ்கும்
வளர்புகழ்ச் சோழனார்தம் மலரடி முடிமேல்வைப்பாம்

கருவூர்த்தேவர்

12 ஊர்ந்தனங் கருவூரன்னை உதரத்திலினியூராமை
சார்ந்தனங்கருவூரென்னத்தவங் திளைத்தாற்றித்
தக்கோர்
ஆர்ந்தநம் கருவூரெந்தை ஆனிலையடிகள் பாதம்
சேர்ந்த நம்கருவூர்த்தேவர்சேவடி சென்னிசேர்ப்பாம்

மெய்கண்ட சந்தானத்தார்

13 மொழிவழி யொழுகுமன்பர் முன்புறுகருப்பைஉந்திச்
சுழிவழியிழியாவண்ணம் துணைப்பத மிதவைநல்கி
விழிவழி அருளினேற்றும் மெய்கண்ட சந்தானத்து
வழிவழிவருவோர் காமர் சேவடிவணங்கி வாழ்வாம்.

ஆனிலைப்பெருமான்

14 நீடிய கரியமாலும் நீண்டவெண் கணனும்முன்னம்
தேடிய சிவனேபோற்றி செழுமறை மிருதியெல்லாம்
பாடிய பரனேபோற்றி பரிபுரமொலிப்பமன்றுள்
ஆடிய அமுதேபோற்றி ஆனிலைநாதாபோற்றி.

15 கரணமே கடந்துநின்ற கடவுளேபோற்றி நாகா
பரணனே போற்றியைந்து பதமென நின்றாய்போற்றி
பிரணவ ஒளியேபோற்றி பிஞ்ஞகாபோற்றி பேணார்
அரணமூன்றடுபுன் மூரல் ஆனிலை நாதாபோற்றி.

16 மன்னி ராசதகுணத்தில் அயனென வகுத்தாய்போற்றி
உன்னு சாத்துவிதத் தாழியோனென அளித்தாய்
போற்றி
முன்னு தாமதத்திலாதி மூர்த்தியாய் முடித்தாய்
போற்றி
அன்னிலை கடந்தாய்போற்றி ஆனிலைநாதாபோற்றி.

17 உருவே அருவே ஒளியே சரணம்
உணர்வே உணர்வார் உணர்வே சரணம்
குருவாய் வெளியே வருவாய் சரணம்
கொடுமால் விடமார் மிடறா சரணம்
கருமா கரிவீழ் உரியாய் சரணம்
கருவேர் அறவே வருவாய் சரணம்
திருமா லறியா இறையே சரணம்
திருவானிலையாய் சரணம் சரணம்.

வாழ்த்து

18 ஞானதேசிகர் சீர்மல்க நாற்பெருங் கவிதைசூழ்க
தேனலர்ப்பொழில்சூழ் வஞ்சித்திருநகர் வளஞ்சிறக்க
வானவர் நாதன்பூசை வளப்பெருந் திருவிளங்க
தானமும் சமயமாறும் தலத்துளோர் யாரும்வாழ்க.

திருச்சிராப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்சி